

கழகத் தலைவர், மு.க.ஸ்டாலின் அவர்களை முன்னாள் அமைச்சர் – அரியலூர் மாவட்டச் செயலாளர் சா.சி.சிவசங்கர் இதய அறுவை சிகிச்சைக்குப் பிறகு, நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்ற போது எடுத்தபடம். கழகத் தலைவர் அவர்கள் சா.சி.சிவசங்கரிடம் உடல்நிலை குறித்து அன்போடு விசாரித்து, விரைவில் முழு நலம் பெற வாழ்த்து தெரிவித்தார். அப்போது கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. உடனிருந்தனர்.

இன்று முன்னாள் அமைச்சர் –

கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் இல்லத் திருமண விழா!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, நவ. 1-

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் - கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களின் பெயர்த்தி - டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி.யின் புதல்வி மணவிழாவை இன்று (நவ.1) காலை சென்னை, ஈ.சி.ஆர். சாலை, ஆர்.கே. கன்வென்சன் சென்டரில் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மணவிழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

மணவிழாவில் முன்னாள் அமைச்சர்கள், கழக முன்னணியினர் - மாவட்டச் செயலாளர்கள் - எம்.பி.க்கள் - எம்.எல்.ஏ.க்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மணவிழா பற்றிய விவரம் வருமாறு:

கழகப் பொதுச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் துரைமுருகன்



- சாந்தகுமாரி துரைமுருகன் ஆகியோரின் பெயர்த்தியும் டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. - சங்கீதா கதிர் ஆனந்த் ஆகியோரின் புதல்வியுமான செந்தாமரைக்கும், திட்டக் குடி ரவிகண்ணன் - தீபா ரவி ஆகியோரின் புதல்வர் தீபக் ரவிக்கும் மணவிழா இன்று (1.11.2026-ஞாயிற்றுக்கிழமை) காலை 7.30 மணியளவில் சென்னை ஈ.சி.ஆர். சாலையில் அமைந்துள்ள ஆர்.கே.கன்வென்சன் சென்டரில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. நன்றி கூறுகிறார்.

இம்மணவிழாவில் முன்னாள் அமைச்சர்கள், கழக முன்னணியினர், சட்டமன்ற நாடாளுமன்ற இந்நாள்-முன்னாள் உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள் - கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டியது கருத்துகளால்; காவல்துறை நடவடிக்கைகளால் அல்ல!

சதியில் ஈடுபட்ட விர்ச்சுவல் விஷமிகளைக் கண்டறிந்து - அத்துமீறிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்!

பேராசிரியர் கலையரசனுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டித்து விடுத்த பதிவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் – த.வெ.க. அரசுக்கு வலியுறுத்தல்!

சென்னை, நவ. 1–

பேராசிரியர் கலையரசனுக்கு இழைக்கப் பட்ட அநீதியைக் கண்டித்து விடுத்த வலை தளப்பதிவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "சதியில் ஈடுபட்ட விர்ச்சுவல் விஷமிகளைக் கண்டறிவதோடு, அத்துமீறிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதும் அவசியம்!" என்று அரசுக்கு நினைவூட்டியுள்ளார்.

கழகத் தலைவர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:

கேள்விகள் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவது நல்லாட்சியல்ல; கேள்விகளுக்குப் பதிலளிக்கும் நிர்வாகத்தை உருவாக்குவதுதான் நல்லாட்சி! விமர்சனங்களை உள்வாங்கித் தமது தவறுகளைத் திருத்திக்கொள்வதுதான் ஜனநாயகத்தின் மாண்பு! விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டியது கருத்துகளால்; காவல்துறை நடவடிக்கைகளால் அல்ல!

Fake IDயின் Commentஐக் காரணமாகச் சொல்லி, அதிகாலையில் காவல்துறை விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பேராசிரியர் கலையரசன் அவர்கள், தமக்கு நேர்ந்த அநீதிக்கு எதிராக



உரிமைக்குரல் எழுப்பி வெளிவந்திருப்பதற்கு எனது வாழ்த்துகள்!

சதியில் ஈடுபட்ட விர்ச்சுவல் விஷமிகளைக் கண்டறிவதோடு, அத்து மீறிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதும் அவசியம் என்பதை அரசுக்கு நினைவூட்டுகிறேன்.

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினின் சமூக வலைதளப் பதிவு:

"மீண்டும் மீண்டுமா?? #TVKFails"



'மெத்' அரசின் மெத்தனப்போக்கால்

தமிழ்நாட்டு மக்களின் பாதுகாப்பு தொடர்ந்து கேள்விக் குறியாகி வருகிறது!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வன்மையான கண்டனம்!

சென்னை, நவ.1–

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று விடுத்த வலைதளப் பதிவொன்றில், "மெத்' அரசின் மெத்தனப் போக்கால் தமிழ் நாட்டு மக்களின் பாதுகாப்பு தொடர்ந்து கேள்விக்குறியாகி வருவதை வன்மையாகக் கண்டிக் கிறேன்!" என்று தெரிவித்துள்ளார்.

அவரது வலைதளப் பதிவு வருமாறு:-

இந்த சோப்ளாங்கி ஆட்சியில் புழல், தேனியைத் தொடர்ந்து கோவை மத்தியச் சிறையில் இருந்தும் ஒரு கைதி தப்பிச் சென்றுள்ளார்.

அடுத்து பாளையம்கோட்டையா? சேலமா? எனக் கைதிகள்



inky pinky ponky போட்டுத் தப்பிச் செல்லும் அளவுக்கு Dummy முதல மைச்சரின் ஆட்சி லட்சணம் இருக்கிறது.

தோல்வி பயத்தில் இடைத்தேர்தல் நடைபெறும் தொகுதிகளுக்கு முதலமைச்சர் ஓடுகிறார்.

மறுபுறம் கைதிகளோ, இது கையாலாகாத அரசு என தெரிந்து கொண்டு சிறையில் இருந்து ஓட்டம் எடுக்கின்றனர்.

இனி பணியிடமாற்றம், சஸ்பெண்ட் செய்யவேண்டும் என்றால் முதலமைச்சர் தன்னைத் தானே தான் செய்துகொள்ள வேண்டும்.

'மெத்' அரசின் மெத்தனப் போக்கால் தமிழ்நாட்டு மக்களின் பாதுகாப்பு தொடர்ந்து கேள்விக்குறி ஆகி வருவதை வன்மையாகக் கண்டிக் கிறேன்.

இவ்வாறு அப்பதிவில் – எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

த.வெ.க அரசைக் கண்டித்து சென்னை மேற்கு, சென்னை தெற்கு மற்றும் சென்னை தென்மேற்கு மாவட்டங்களின் மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஏற்பாட்டில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சேப்பாக்கம் – சிவானந்தம் சாலையில் நேற்று எழுச்சியுடன் நடைபெற்றது. இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் விஜயா தாயன்பன், டாக்டர் கனிமொழி சோமு, ராணி ரவிசந்திரன், ரத்னா, டாக்டர் யாழினி உள்ளிட்ட மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், பொதுமக்கள் திரளானோர் பங்கேற்றனர்.



தாம்பரத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி – மகளிர் தொண்டர் அணி சார்பில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் – கழக மகளிர் அணி பிரச்சாரக்குழுச் செயலாளர் சேலம் சுஜாதா ஆகியோர் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர். அருகில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சசிகலா, தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகர மகளிர் அணி அமைப்பாளர் ரமணி ஆதிமூலம், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் – மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.